


சென்னை தென்மேற்கு மாவட்டம் 123வது வட்டக் கழகம் சார்பில் கோடை காலத்தை எதிர்கொள்ளும் வகையில் பொதுமக்கள் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் விழா டி.கே.கே. சாலை, எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் மற்றும் சென்மேரிஸ் சாலை சந்திப்பிலும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் திறந்து வைத்து பழ வகைகளையும் நீர் மோர் மற்றும் குளிர்பானங்களையும் வழங்கினர். இந்நிகழ்ச்சிக்கு ஜி.ராஜி என்கிற முத்து மாடசாமி, வசந்த் கபாலி ஆகியோர் ஏற்பாட்டிலும், வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு மாநில, மாவட்ட, வட்டக் கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட க்கழகம் சார்பில் வட்ட கழக பொறுப்பாளர் க.கலைசெல்வன் ஏற்பாட்டில் ஐட்ரிம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வே.சிவகுமார், எல்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தல் திறந்துவைத்து பொதுமக்களுக்கு இளநீர், மோர், ரோஸ்மில்க், தர்பூசணி உள்ளிட்ட பழங்களை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### திருப்போரூர் தொகுதி – திருக்கழுக்குன்றம் வட்டம் – ஒத்திவாக்கம், பொன் விளைந்த களத்தூர்

# இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி விரைந்து நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

**சென்னை, ஏப். 17–**

**சட்டப்பேரவையில் திருப்போரூர் தொகுதி உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:**



**எஸ்.எஸ்.பாலாஜி:** திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் அமைந்திருக்கின்ற ஒத்திவாக்கம், பொன் விளைந்த களத்தூர் இரயில்வே மேம்பாலம் பத்தாண்டுகளுக்கு மேலாக, நெடுஞ்சாலைத் துறை அமைக்க வேண்டிய இணைப்பு மேம்பாலம் அமைக்கப்படாமல் இருந்ததை அமைச்சர் அவர்கள் அதற்கு வழிவகை செய்து, இன்றைக்கு அதற்கான நில எடுப்பு செய்து, அந்தப் பணி நடைபெற்று வருகிறது. ஒருபுறம் வேகமாக நடைபெற்று வந்தப் பணி, மறுபுறம் PIER போடுவதிலே மந்தமான நிலையில் இருக்கிறது என்று மக்கள் தெரிவித்து வரக்கூடிய நிலையில் அமைச்சர் அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு உடனடியாக முடித்துத்தர முன்வருவாரா என்பதை கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற போது, ஏறத்தாழ 71 பாலங்களின் பணிகள் நிலுவையில் இருந்தன.

ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வு நடத்தியதன் அடிப்படையிலும், நேரடியாக தளத் தணிக்கை செய்த தன் அடிப்படையிலும், 35 பாலப் பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. ஏனைய 35 பாலங்களிலே, ஒரு பாலம்தான் இந்த பாலமாகும். ஆனால், தொடர்ந்து, அதுசம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய நிதியுதவிகளும் அரசின் சார்பாக பெற்றுத் தந்து கொண்டிருக்கிறோம். அவர் சொன்ன அந்த பாலத்திற்கு கட்டாயம் முன்னுரிமை அளிக்கப்படும். ஏனென்றால், அது முக்கியமான ஒரு இரயில்வே பாலம் என்பதை நானும் அறிவேன். CHESS COMPETITION நடக்கின்ற போது, நானே நேரடியாக அங்கு சென்று பார்வையிட்டேன். அடுத்தவாரம் அந்த பகுதிக்குச் செல்வதாக இருக்கிறேன். நேரடியாக பார்த்துவிட்டு, நிலுவையிலுள்ள பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

# செங்கம் நகராட்சியில் சாலைகள் அமைத்துத் தரப்படுமா?

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் மு.பெ.கிரி கேள்வி!

**சென்னை, ஏப். 17–**

**சட்டப்பேரவையில் செங்கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:**



**மு.பெ. கிரி:** செங்கம் நகராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பேரூராட்சியாக இருக்கும்போது பல சாலைகள் 90 சதவிகிதத் திற்கும்மேல் குண்டும், குழியுமாக இருந்தன. இந்த ஆண்டு அந்தச் சாலைகளையும், கால்வாய்களையும் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**கே.என். நேரு:** ஏற்கெனவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை கேட்டார்கள். எனவே, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள், நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளிலே சாலைகளை சரிசெய்வதற்காக 3,780 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்திருக்கிறார்கள். எனவே, செங்கம் நகராட்சியைப் பொருத்தளவு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் அந்தப் பகுதியைப் பார்க்க வேண்டும். அதேபோன்று, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை குடிநீர் திட்டத்தை பற்றியும் பேசியிருக்கிறார். எனவே, செங்கம் நகராட்சியைப் பற்றி பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். உறுப்பினர் கோரியது போல், அங்கே எந்தெந்த சாலை பிரதான சாலை இருக்குமானால் நிச்சயமாக அதை எடுத்து, உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### எம்.வி.குமார் தலைமை! கோல்டு பிரகாஷ் – ஆர்.டி.பூபாலன் பங்கேற்பு!

# ஆலந்தூர் வடக்கு பகுதி 160 வது வட்ட தி.மு.க ஆலோசனைக் கூட்டம்!

## கே.பி.முரளி கிருஷ்ணன் அறிக்கை! ப.குணாளன் ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை, ஏப்.17-

160வது வட்ட கழக செயலாளர் கே.பி.முரளி கிருஷ்ணன் விடுதுள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆணைகினங்க ஆலந்தூர் வடக்கு பகுதி 160 வது வட்ட தி.மு.க ஆலோசனை கூட்டம் இன்று (17.04.2025 வியாழன் மாலை 500 மணியளவில் ஆலந்தூர் கற்பக விநாயகர் கோயில் மண்டபத்தில் வட்ட அவைத் தலைவர் எம்.வி. குமார் தலைமையில், வட்ட நிர்வாகிகளான எஸ்.சகிம்சா, வி.ராஜா, கா.விமலா, எ.ஆர்.ஸ்ரீதர், ஏ.ரூபண், ஆர்.எஸ்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ப.குணாளன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல் டி.பிரகாஷ், பொதுக் குழு உறுப்பினர் ஆர்.டி. பூபாலன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

எனவே 160வது வட்டத்திற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள் (BLA-2), கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1.கலைஞர் கைவினை திட்டத்தை துவக்கி வைக்க குன்றத்தூர் வருகை தரும் கழகத் தலைவர்,தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து.

2).கழக ஆக்க பணிகள்

இவ்வாறு 160வது வட்ட கழக செயலாளர் கே.பி.முரளி கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்

# செய்யூரில் முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

காஞ்சிபுரம், ஏப். 17 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையிலும் லத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். எஸ். பாபு ஏற்பாட்டிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் செய்யூரில் 15.4.2025 அன்று நடைபெற்றது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் செய்யூர் திரௌபதி அம்மன் கோயில் அருகில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். லத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். எஸ். பாபு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஒன்றிய நிர்வாகிகள் மணி, அர்சுணன், ஜெயலட்சுமி மகேந்திரன்,மகாகண பதிராமன், டில்லி பாபு, வெங்கடேசன், பன்னீர்செல்வம், கிருஷ்ணவேணி தணிகாசலம், பாபு, தணிகாசலம், சுரேஷ், மகேந்திரன், சுகன்யா, புனிதா, பொற்செல்வன், அருண்மொழி வர்மன், சிற்றரசன், நித்தியானந்தன், மஞ்சுளா, மோகனா கோபிநாத், லோகாம்பிகை, ராஜமாணிக்கம், திவாகர், ராஜமாணிக்கம், காளியப்பன், நாகராஜ், மோகன் மணிவண்ணன், முருகன், கார்த்திகேயன், ராஜசேகர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் கேவி. செழியன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினர்.

இளம் பேச்சாளர் சூர்யா மகள் ஆண்டாள் பிரியதர்ஷினி, காஞ்சிபுரம் எம்பி ஜி.செல்வம், இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் தசரதன். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் க. தியாகராஜன், ஒன்றிய செயலாளர் சிற்றரசு, பொதுக்குழு உறுப்பினர் மோகன் தாஸ், முன்னாள் ஒன்றிய குழு பெருந் தலைவர் சுபலட்சுமி பாபு, உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆதிதிராவிடர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக கிளை செயலாளர்கள், கிளை பிரதிநிதிகள் உள்ளிட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தமிழ்மாறன் நன்றி கூறினார்.




செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. அவசரச் செயற்குழுக் உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஏற்பாட்டில் ஏ.வீரபத்திரன் தலைமையில் கே.பூபதி, எச்.பாஸ்கரன், சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் க.ரமேஷ் வரவேற்புரையில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில், மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம்!

# சட்டமசோதாவை அறிமுகம் செய்து வைத்துள்ள முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் சங்க பொதுச் செயலாளர் ஆவின் கோபிநாத் அறிக்கை!

சென்னை, ஏப். 17-

தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கம் சார்பில், அச்சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் அரிமா டாக்டர் ஆவின் கி.கோபிநாத், தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து விடுத்துள்ள ஓர் அறிக்கையில்

மாற்றுத் திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிக்கும் வகையில், அவர்களுக்கு மேலும் ஒரு மணிமகுடம் சூட்டப்படுவது போல், மாநிலத்தில் உள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளில், மாற்றுத் திறனாளிகள் தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் தேர்வு செய்யப்படுவதற்கான சட்ட முன்வடிவை, சட்டசபையில் அறிமுகம் செய்து வைத்துள்ள, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கம் சார்பில், மனமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், தமிழக அரசின் இத்திட்டத்தால், 12 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் இடம்பெறுவது உறுதி செய்யப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் அதிகாரமிக்க அவைகளில் இடம்பெறச் செய்ய வழிவகை செய்து தந்துள்ள, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, “நன்றிபாராட்டு விழா”, கூடிய விரைவில் கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கமும், மாற்றுத் திறனாளர் பேரவை அமைப்பும், அரசு பல்நோக்கு மருத்துவமனை அனைத்து மாற்றுத்திறன் பணியாளர்கள் சங்கமும் இணைந்து நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்கிட

# சட்ட மசோதா நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மாற்றுத்திறனாளிகள் சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை ஏப்:17

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ. தங்கம் விடுதுள்ள அறிக்கை வருமாறு;

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள்

முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும்,ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் “உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்துவம்” வழங்கிட சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றிய மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றியும், பாராட்டும் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் படப்பை ஆ. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய நிர்வாகிகள். மு.சுப்பிரமணி, வ.நந்தகோபால் ஏ. மணி, வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, வி.அரி, மூ.ராஜேந்திரன், ம.பரிமேலழகன், ப.அறிவொளி,அ.ஜமீர் கிளைக் கழகம் செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் பகுதிக் கழக அலுவலகத்தில் சட்டமேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 135 ஆவது பிறந்த நாள் – சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு பகுதிக் கழகச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்றனர். இதில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, இர.குமரேசன், எஸ்.தமிழ்செல்வன், எஸ்.பாஸ்கர், ஒய்.நந்திவர்மன், ஆர்.ரஜினிபாபு, பழனிவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.